Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, APRIL 19, 2023

புதன்கிழமை ஏப்ரல் 19, 2023 | ஒளி: 08 கதிர்: 252 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## 'கோட்டா'வில் மாற்றம் இல்லை

பண்டிகை காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் அளவை எதிர்வரும் ஒரு வாரத்திற்கு அவ்வாறே தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு எரிபொருள் அளவை அதிகரிக்க கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், கியூ ஆர். முறையின் கீழ் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் அளவை எதிர்வரும் ஒரு வாரத்திற்கு தொடர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P12

## மீன்கள் இறந்த கொத்மலை ஓயாவில் இரசாயன பொருள் கலந்துள்ளது

ஆ.ரமேஸ், எஸ்.கௌசி



தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் கொத்மலை ஓயாவில் வாழும் மீன்கள் மர்மமான முறையில் உயிரிழந்தமைக்கு இரசாயனப் பொருள் கலந்தமையே காரணமாகுமென நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நிஷங்க விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு அம்பேவெல பிரதேசத்தில் இருந்து மெரயா, எல்ஜின், அக்கரகந்த, லிந்துல, தலவாக்கலை, கொத்மலை ஓயா வரை சுமார் 40 கிலோ மீற்றர் நீர் வருகின்றது.

தொடர்ச்சி P12

# "நம்பி ஏமாற வேண்டாம்"



மக்கள் நிராகரித்த அரசாங்கத்துடன் எங்களுக்கு எந்த வித தொடர்புகளும் இல்லை. எனவே போலி பிரசாரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹிட்லர், இரண்டாம் உலகப் போரின் போது கோயபல்ஸைப் பயன்படுத்தி ஊடகங்கள் மூலம் பொய்களைப் பரப்பி சமூகமயப்படுத்தியது போன்று, தற்போதைய இலங்கை ஜனாதிபதியும் பொய்ப் பிரசாரம் செய்யும் கூட்டு அரசியல் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (18) தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "உண்மையான ஊடகவியலாளர்களை கூட இழிவுபடுத்தி, தங்களை ஊடகவியலாளர்கள் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு குழுவின் மூலம் உண்மைகளை பொய்யாகவும், பொய்களை உண்மையாகவும் மாற்றும் பெரும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி P12

## குரங்குகள் விவகாரம்: அச்சத்தில் நவீன்



சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் ஆய்வகங்களில் தங்கவைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க அச்சம் தெரிவித்துள்ளார்.

"முன்னாள் வனவிலங்கு அமைச்சரான நான், சீனாவிற்கு டோக் குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கு முற்றிலும் எதிரானவன்" என்றும் அவர் ட்வீட் செய்துள்ளார்.

100,000 குரங்குகளை உயிரியல் பூங்காக்களில் வைப்பதற்காக சீனாவுக்கு அனுப்ப இலங்கை பரிசீலித்து வருகிறது.

சீனா விடுத்த கோரிக்கையை ஏற்று குரங்குகள் அனுப்பப்படுகின்றன.

தொடர்ச்சி P12



## நாகபூசணி சிலை விவகார வழக்கு ஒத்திவைப்பு

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இந்து அமைப்புகள் சார்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தா, அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகளும் முன்னிலையாகி இருந்தனர்.

தொடர்ச்சி P12




## கரைக்கால் – காங்கேசன்துறை

## பயணிகள் கப்பல் சேவை மே நடுவில் ஆரம்பம்

இந்தியாவின் காரைக்கால் மற்றும் இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை, எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளதாக 'IndSri Ferry Service' நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

சுமார் 65 கடல் மைல் தூரம் கொண்ட இப்பயணத்திற்கு நான்கு மணித்தியாலம் தேவைப்படும் எனவும், ஒரு வழி போக்குவரத்திற்கு 50 அமெரிக்க டொலர் அறவிடப்படவுள்ளதாகவும் இக் கப்பலில் 120 - 150 பயணிகள் வரை ஒரு தடவையில் பயணிக்க முடியும் எனவும், ஒரு பயணி 100 கிலோ கிராம் வரை கொண்டுசெல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12



## GalleFace Green இல் நிகழ்ச்சிகளை நடத்தத் தடை

சமய நிகழ்வுகள் தவிர்ந்த இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் உள்ளிட்ட ஏனைய நிகழ்வுகளை காலிமுகத்திடலில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்காதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

காலிமுகத்திடலின் எழில் மிகுந்த தோற்றத்தை பாதுகாப்பதற்காகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

தொடர்ச்சி P12



## மே 1 முதல் முட்டை விலையும் குறையும்

தற்போதைய விலையிலும் குறைந்த விலையில் முட்டைகளை மே 1ஆம் திகதி முதல் நுகர்வோருக்கு விற்பனை செய்யமுடியும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் முட்டையின் விலை இன்னும் குறையும். எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் முட்டை ஒன்றை 25 அல்லது 30 ரூபாய்க்கு விற்பனை செய்யமுடியுமென அந்தச் சங்கத்தின் தலைவர் சரத் ரத்னாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

## 4 சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

மின்சார விநியோகம், பெட்ரோலிய உற்பத்தி, எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், தபால் சேவை, சுகாதார சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12

## Wish ஐ kiss ஆக்கிய அதிபர் கைது

தனியார் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை ஒருவரை, புதுவருட வாழ்த்து தெரிவிப்பதாக கூறி பலவந்தமாக முத்தமிட்ட அப்பாடசாலையின் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளதாக மினுவங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடவத்த பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே (வயது 61) இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 23 வயதான ஆசிரியை அளித்த

தொடர்ச்சி P12

## சீன ராடாருக்கு மறுப்பு; குரங்குக்கு பதிலளிப்பு கிசுகிசுவென விளக்கம்



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன, கேள்விகளுக்கு பதிலளித்த போதிலும் முக்கிய கேள்விக்கு பதிலளிக்காது நழுவியதுடன், அமைச்சரவை மாற்றம் தொடர்பிலான கேள்விக்கு 'கிசுகிசு' என்றார்.

குரங்கு ஏற்றுமதியே வெகுவாக பேசப்படுகின்றது. இறக்குமதி, ஏற்றுமதியில் பொருட்கள், சேவைகள், விலங்குகள் தொடர்பில் ஒரு தரப்பினரால் தீர்மானத்தை எடுக்கமுடியாது. வாழும் மிருகங்களை அனுப்புவதிலும் சிக்கல்கள் உள்ளன என்றார்.

சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்தல், இரண்டு அரசாங்கங்களால் (சீன-இலங்கை) எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. சீனாவில் உள்ள தனியார் நிறுவனமொன்று,

தொடர்ச்சி P12




## அரைச் சொகுசு பஸ்களுக்கு தடை: பயணிகளுக்கு வெற்றி

அரைச் சொகுசு பஸ் சேவையை அடுத்த மாதம் முதல் இரத்து செய்ய தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரைச் சொகுசு பஸ்கள் தொடர்பில் கிடைக்க பெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்தே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் நிலான் மிரேன்டா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "போக்குவரத்து அமைச்சின் அறிவுறுத்தலின்படி அரைச் சொகுசு சேவையை சாதாரண சேவையாகவும், சொகுசு சேவையாகவும் மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தொடர்ச்சி P12





## தமிழ்நாடு – தலைமன்னாரை இணைக்கும் சுரங்கப்பாதை வேண்டும் – இந்திய பிரதமருக்கு கலாநிதி வீராசாமி கடிதம்

தமிழ்நாட்டையும் இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் வகையில் கடலுக்கடியில் சுரங்கப்பாதை அமைக்க வேண்டுமென இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர், கலாநிதி வீராசாமி கடிதம் எழுதியுள்ளார்.

இந்தச் சுரங்கப்பாதை கடலுக்கு அடியில் தமிழ்நாட்டின் தென் பகுதியையும் இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டுமென அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொருளாதார ரீதியில் இந்தியாவை மற்றும் இலங்கையை சாலை மூலம் இணைப்பதன் பயன் மிகப் பெரியதாகும் எனவும் இந்தியா, இலங்கையில் வாழும் மக்கள் இதன்மூலம் பாரிய நன்மையடைவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையே கடலுக்கு அடியில் முதலாவது சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## மீன்கள் இறந்த கொத்மலை ஓயாவில் இரசாயன பொருள் கலந்துள்ளது

அம்பேவெலயிலிருந்து லிந்துல, அக்கரகந்த வரையான சுமார் 12 கிலோ மீற்றர் வரையான அந்த ஓயாவிலும் ஞாயிற்றுக்கிழமை (16) முதல் ஆயிரக்கணக்கான மீன்கள் உயிரிழந்து மிதந்தன.

இறந்த மீன்களின் உடல் பாகங்கள் மற்றும் கொத்மலை ஓயாவின் நீர் மாதிரிகள் பேராதனைக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அந்த நீரில், இரசாயனப் பொருள் கலந்திருந்தமை கண்டறியப்பட்டது.

இந்நிலையில், ஆற்று நீரானது கறுப்பு நிறத்தில் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கரைஒதுங்கிய மீன்களை அப்பகுதி மக்கள் சிலர் சமையலுக்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதேநேரத்தில் அக்கரப்பத்தனை, ஹோல்புரூக் பகுதியில் இயங்கிவரும் தேயிலை தொழிற்சாலையின் கழிவானது குறித்த ஆற்றுநீரில் கலந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஆக்ரஓயா ஆற்றில் ஓடும் நீரினை அக்கரகந்த தொடக்கம் தலவாக்கலை வரை ஆற்று ஓரத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பாவனைக்கு எடுத்து கொள்வதாகவும், ஆற்றுநீர் மாசடைந்துள்ள நிலையில் விவசாயத்திற்கு இதனால் பாதிப்புகள் ஏதும் ஏற்படுமா என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது குறித்து சுகாதாரப்பிரிவு அதிகாரிகள் மற்றும் சுற்றாடல் பிரிவினர் தலையிட்டு உடனடியாக தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## "நம்பி ஏமாற வேண்டாம்"

பிரதமர் பதவியை பெற்றுக் கொள்ள, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடியதாக தற்போதைய அரசாங்கம் பொய்யான செய்திகளை உருவாக்கி வருவதாகவும், மக்கள் ஆணை இல்லாத, மக்களால் நிராகரிக்கப்பட்ட தற்போதைய அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இணையாது எனவும், எனவே இவ்வாறான பொய்யான மற்றும் போலியான செய்திகளை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம்" எனவும் அவர் தெரித்துள்ளார்.

அத்துடன் பிரதமர் பதவி தொடர்பாகவோ அல்லது தேசிய அரசாங்கம் தொடர்பாகவோ அல்லது அமைச்சுப் பதவிகள் தொடர்பாகவோ தானோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியோ எந்தவித கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை எனவும், ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் *கோயபல்ஸ் கொள்கையை* கடைப்பிடித்து, பெரும் போலி ஊடக பிரசாரத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு பயமெனவும், முடியுமானால் கிட்டிய காலத்தில் பாராளுமன்ற தேர்தலையோ அல்லது ஜனாதிபதி தேர்தலையோ அல்லது தற்போது நிதி ஒதுக்க நழுவி வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையோ நடத்துமாறு தான் தற்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாகவும், அவ்வாறு தேர்தலை நடத்தும் போது உண்மையான மக்கள் ஆணை எங்குள்ளது என்பதை நன்றாக புரிந்து கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மக்களின் வாக்குரிமைக்கு பெறுமானம் சேர்க்கும் விடயத்தில் என்றும் தான் முன்நிற்பதாகவும் மக்கள் ஆணையற்ற தற்போதைய அரசாங்கத்துடன் பணத்துக்கும் சலுகைகளுக்கும் அமைச்சுப் பதவிகளுக்கும் விலைபோகும் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியிலோ இல்லை எனவும், மக்கள் ஆணையே உயர்வானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 'கோட்டா'வில் மாற்றம் இல்லை

இதற்கமைய, ஓட்டோக்களுக்கு 5 லீற்றரில் இருந்து 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 4 லீற்றரில் இருந்து 7 லீற்றராகவும், பஸ்களுக்கு 40 லீற்றரில் இருந்து 60 லீற்றராகவும், கார்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும், லொரிகளுக்கு 50 லீற்றரில் இருந்து 75 லீற்றராகவும், சிறப்பு நோக்க வாகனங்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும், வேன்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும், *land vehicles* 15 லீற்றரில் இருந்து 25 லீற்றராகவும், *quadric cycle* 4 லீற்றரில் இருந்து 6 லீற்றராகவும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## குரங்குகள் விவகாரம்: அச்சத்தில் நவீன்

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது சீன பிரதிநிதிகள் குழுவொன்று இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அதன்படி, ஒரு குழுவின் ஒப்புதல் கிடைத்ததும், முதல் கட்டத்தில் 100,000 குரங்குகள் அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"இது ஓர் அருவருப்பானது. இது இலங்கையின் விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் சட்டத்திற்கு எதிரானது என்பதால் அதைக் கருத்தில் கொள்ளக்கூடாது" என்று திஸாநாயக்க கூறினார்.

இலங்கையில் பாதுகாக்கப்படும் உள்ளூர் இனங்களை ஒருபோதும் பெருமளவில் ஏற்றுமதி செய்யக்கூடாது என்றும் மிருகக்காட்சிசாலைகளுக்கு இடையிலான பரிமாற்ற திட்டங்களில் மட்டுமே வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"அவர்கள் ஆய்வகங்களுக்குள் கொண்டு சென்று சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதற்கான ஒரு பெரிய வாய்ப்பு உள்ளது. இது மனிதாபிமானமற்றது" என்றும் குரங்குகள் அழகான விலங்குகள் என்றும், அவற்றின் இயற்கையான வாழ்விடத்தில் சுற்றித் திரிந்து முழு வாழ்க்கையை வாழ முழு உரிமையும் உண்டு என்றும் திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## மே.1 முதல் முட்டை விலையும் குறையும்

இந்நிலையில், பண்டிகை காலங்களில் ஆகக்கூடுதலான விலைக்கு முட்டையை விற்பனை செய்த 700 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், 6,000 சிறிய சுற்றிவளைப்புத் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அந்த அதிகார சபையின் தலைவர் ஷாந்த கிரியெல்ல தெரிவித்தார்.

## பயணிகள் கப்பல் சேவை மே நடுவில் ஆரம்பம்

அந்தவகையில் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 8 மணிக்கு காரைக்காலில் பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது நண்பகல் 12 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும் எனவும், மீண்டும் காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து 6 மணியளவில் காரைக்காலை சென்றடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இக் கப்பல் சேவை ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் இந்திய அரசாங்கத்தினால் கிடைக்கப்பெறவிருந்த சில அனுமதிகள் தாமதமடைந்ததால், கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



## GalleFace Green இல் நிகழ்ச்சிகளை நடத்தத் தடை

சமூகப் பொறுப்பு நிதி கருத்திட்டமாக காலிமுகத்திடலை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை 220 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது.

கடந்த போராட்ட காலங்களில் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்களைப் புதுப்பிப்பதற்காக மாத்திரம் 6.6 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் சுதந்திரமாகப் பொழுதைக் கழிப்பதற்கு இயலுமாகும் வகையில் இத்திடலைப் பயன்படுத்த வேண்டியிருப்பினும், இசை நிகழ்ச்சிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடும் வேறு பல செயற்பாடுகளால் இத்திடல் தொடர்ந்து சேதமடைவதுடன், இச்சுற்றுச்சூழலின் அழகையும், எழில் மிகுந்த தோற்றத்தையும் பேணிச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

ஜனாதிபதியின் செயலாளரால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெட்ரோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், தபால் சேவை, வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் அது போன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை வழங்கல் தொடர்பில் வழங்கப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் சகல வசதிகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் பொதுவாழ்க்கையை பேணுவதற்கு உரிய நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் இன்றியமையாதவை என்பதால் அந்தச் சேவைகளில் தடையோ அல்லது இடையூறுகளோ ஏற்படக்கூடும் என்பதை கருத்தில் கொண்டே அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## சீன ராடாருக்கு மறுப்பு குரங்குக்கு பதிலளிப்பு

அங்குள்ள 16 மிருகக்காட்சி சாலைகளுக்கு குரங்குகளை கொள்வனவு செய்து கொள்வது தொடர்பில், விவசாயத்துறை அமைச்சுக்கு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது. அதற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர, ஏனைய நிறுவனங்களுடன் ஆலோசித்து வருகின்றார்.

இலங்கையை விடவும் சீனாவில் அமலில் இருக்கும் சட்டங்கள் கடுமையானவை என்று தெரிவித்த அமைச்சர் பந்துல, இந்த விவகாரத்தில் பல விடயங்களை ஆராயவேண்டும் என்றார்.

இந்நிலையில், ருஹுனு பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தெவிநுவர தெற்கு நகரத்தில் ராடார் அமைப்பை நிறுவுவதற்கு சீனாவுடன் எந்வோர் உடன்பாடும் இல்லையென அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பிலான கேள்விக்கு பதிலளித்த அவர், "கிசுகிசு செய்தியாகும்; எனினும், அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு செய்வாராயின் நாட்டுக்கு அறிவிப்பார்" என்றார்.

இந்நிலையில், சமய நிகழ்வுகள் தவிர்ந்த இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் உள்ளிட்ட ஏனைய நிகழ்வுகளை காலிமுகத்திடலில் மேற்கொள்வதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் அனுமதி வழங்காதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அப்படியாயின், ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அமைச்சுக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'வசத் சிரிய 2023' தமிழ்- சிங்கள புத்தாண்டு போட்டிகளை எப்படி 22 ஆம் திகதி நடத்த முடியுமென எழுப்பிய கேள்விக்கு, எந்தவொரு பதிலையும் அமைச்சர் பந்துல குணவர்தன அளிக்கவில்லை.

## Wish ஐ kiss ஆக்கிய அதிபர் கைது

முறைப்பாட்டின் பெயரில் சந்தேக நபரான அதிபரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தன்று குறித்த ஆசிரியை பணிகளை முடித்து வீட்டுக்குச் செல்ல ஆயத்தமான போது புதுவருடத்துக்கு வாழ்த்து தெரிவிக்க முடியவில்லை எனக்கூறி சந்தேக நபரான அதிபர் வலுக்கட்டாயமாக ஆசிரியையை முத்தமிட்டுள்ளதாக விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

## அரைச் சொகுசு பஸ்களுக்கு தடை: பயணிகளுக்கு வெற்றி

அதன்படி, அனைத்து பஸ் உரிமையாளர்களும் தங்களது பஸ்களை சாதாரண சேவையாகவோ அல்லது சொகுசு சேவையாகவோ மாற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

"கட்டணம் ஏதும் வசூலிக்காமல் செய்து வருகிறோம். தற்போது 430 பஸ்கள் உள்ளன. இவ்வாறு சேவை திருத்தம் கோரி சுமார் 20 பஸ்களுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. மே மாதம் 31ஆம் திகதி வரை சேவை திருத்தம் மேற்கொள்ளப்படும்" என அவர் தெரிவித்தார்.

அதே சமயம் போக்குவரத்து மாஃபியாவின் செல்வாக்கிற்கு அடிபணியாமல் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவுக்காக போக்குவரத்து அமைச்சுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அகில இலங்கை பஸ் பயணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த நடைமுறையை அமல்படுத்துவது தொடர்பில் சந்தேகம் இருப்பதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## குடிநீர் விநியோகத்தில் சிக்கல்

மு. தமிழ்ச்செல்வன்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிராஞ்சி குடிநீர் திட்டத்தின் கீழ் விநியோகிப்படுகின்ற குழாய் வழி குடிநீரானது, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் கடும் வெப்பமான நிலைமை காரணமாக, நீர் மூலத்திலிருந்து தொடர்ச்சியாக நீரைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளமையால் கிராஞ்சி குடி நீர் விநியோக திட்டத்தின் கீழ், குழாய் வழி நீர் விநியோகிப்படுகின்ற கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிநீர் விநியோக்கப்படும் எனவும் எனவே, பொது மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர்.

## 8 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை

அநுராதபுரம், குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வெப்பமான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன், மேலே குறிப்பிட்ட 8 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போதுமான அளவு நீர் பருகுமாறும் நிழலான இடங்களில் இளைப்பாறுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

முதியோர் மற்றும் நோயாளர்கள் தொடர்பிலும் இக்காலகட்டத்தில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடினமான வேலைகளை மட்டுப்படுத்துமாறும், சிறு குழந்தைகளை வாகனங்களில் தனியாக விட்டுச்செல்ல வேண்டாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## ஹஜ் கடமைக்காக 105 முகவர்கள் தெரிவு

ஹஜ் கடமைக்காக 105 முகவர்கள் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முகவர்கள் தொடர்பில் தகவல் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள திணைக்களத்தின் தலைவர் Z.A.M.பைசல், ஹஜ் பயணத்துக்கான வேலைகளை அவர்களுடன் மாத்திரம் முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். ஹஜ் கடமைக்காக இலங்கையிலிருந்து 3,500 பேருக்கு இம்முறை சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றார்.

முற்பணம் செலுத்தி ஏற்கெனவே பதிவு செய்தவர்கள் மிக விரைவில் தமது பயணத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் புதிதாக பதிவு செய்ய விரும்புவோரும் விரைவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## நாகபூசணி சிலை விவகார வழக்கு ஒத்திவைப்பு

குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கிடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்கு உட்படுத்தி இருவரும் நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

எழுத்துமூல சமர்ப்பணங்களுக்காக வழக்கு மே மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# வக்பு சொத்துகள் சட்டத்தில் திருத்தங்கள் வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

**செயிட் அஸ்லம்**



முஸ்லிம் சமூகத்தில் வசதி படைத்தவர்களால் தமது மரண ஈடேற்றத்துக்காக சமூகம் நோக்கம் கருதி அன்பளிப்பு செய்யப்படுகின்ற சில வக்பு சொத்துகள், சரியான பரிபாலனம் இல்லாமல், சீரழிக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். வக்பு சொத்துகள் உரிய நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் இப்தார் வைபவம், மர்ஹூம் ஹஸ்ரத் யூ.எல்.எம் காஸிம் மௌலவி தொடர்பான நினைவேந்தல், துஆப் பிராத்தனை நிகழ்வுகள் கல்லூரியின் ஸ்தாபக தவிசாளரும் கல்முனை மாநகர முன்னாள் மேயருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (16) சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில், சாய்ந்தமருது பிரதேசத்தின் மூத்த உலமாவாகத் திகழ்ந்த சன்மார்க்க அறிஞர் யூ.எல். எம்.காஸிம் மௌலவி அவர்களை நினைவுகூர்கின்ற இச்சந்தர்ப்பத்தில், அன்னார் மார்க்கக் கல்வி கற்ற மஹரகம கபூரியா அரபுக் கல்லூரியின் வக்பு சொத்துகள் இன்று சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டிருக்கிறது. இதை ஒரு சமூகப் பிரச்சினையாக கருத வேண்டும்.

இந்தக் கபூரியா அரபுக் கல்லூரியின் வக்பு சொத்துகள், மர்ஹூம் எம்.கே.எச். அப்துல் கபூர் எனப்படுகின்ற பெரும் கோடீஸ்வர வர்த்தகரால் அன்பளிப்பு செய்யப்பட்டவையாகும். அவற்றுள் மிக முக்கியமான சொத்து, மஹரகம பகுதியில் 17.5 ஏக்கர் காணியை இக்கல்லூரிக்கென வழங்கியிருப்பதுடன் தலைநகரில் அமைந்துள்ள சுலைமான் வைத்தியசாலையையும் கிராண்ட்பாஸ் பகுதியில் இரண்டரை ஏக்கர் காணியையும் கல்லூரியின் பரிபாலனத்துக்காக அவர் வக்பு செய்திருந்தார்.

ஆனால், இந்த வக்பு சொத்துகள் இன்று மர்ஹூம் அப்துல் கபூர் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் இடையில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டு, நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையில் வக்பு செய்தவரின் நோக்கத்துக்கு மாறான நிலைப்பாடுகளை எடுப்பதைத் தவிர்த்து, இதனை சுமூகமாக தீர்ப்பதற்குரிய சில சட்டத்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கூடிய அவதானம் செலுத்தி, ஆலோசித்து வருகின்றோம் என்று ரவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டார்.



### காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின்

# சம்மேளன அலுவலகம் திறப்பு

**எம்.எஸ்.எம் நூர்தீன்**

காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அலுவலகம் புனரமைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (16) மாலை திறந்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் ரவூப் ஏ மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மேளன செயலாளர் அஷ்ஷெய்ஹ் சபீல் நழீமி உட்பட சம்மேளனன முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சுகாதாரத்துறையில் சவால்கள்

## கல்முனையில் விசேட கலந்துரையாடல்

**நூருல் ஹுதா உமர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவு தலைவர்களுக்கான கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில் திங்கட்கிழமை (17) நடைபெற்றது.

இதன்போது, சுகாதார உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அதிகமான வெளிநாடு செல்வது மற்றும் நீண்டகால சம்பளமற்ற விடுமுறை பெறுவதால் கல்முனை பிராந்தியத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பிலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்நிலைமையை சமாளிக்கும் பொருட்டு நோயாளிகளை வேறு மாகாணங்களுக்கு சிகிச்சைகளுக்காக அனுப்புவதில் உள்ள சவால்கள், வைத்திய ஆலோசனை இன்றி மருந்தகங்களில் மருந்துகள் விற்பனை, ஒக்சிஜன் சிலிண்டர்களை அண்மையில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து பெறுதல், மீன்களுக்கு அசுத்தமான மண்ணை கலத்தல், உணவகங்களின் தரம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.





### கல்முனை, இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய

# கத்தார் கிளை அங்குரார்ப்பணம்

**நூருல் ஹுதா உமர்**

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் கத்தார் வாழ் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அமையத்தின் இப்தார் நிகழ்வும், பொதுக் கூட்டமும் கத்தார் முன்தஸா பூங்கா வெளியில் நடைபெற்றது.

இதன்போது, கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அமையத்தின் தற்காலிக நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது. இந்தச் சபையில் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜீ.எம் றிஷாத் தலைவராகவும் உபதலைவராக எம்.டீ.எம் இஜாஸ், செயலாளராகவும் ஊடக பொறுப்பாளராகவும் மௌலவி ஏ.பீ.எம் றிணோஸ் (ஹாமி) ஆகியோரும் பொருளாளராக என்.எம் அஸ்மியும் ஒருங்கிணைப்பாளராக என்.எம்.நிஜாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும், ஆலோசனை சபையில் எச்.எம் பஸ்மீர், ஏ லுக்மான், ஏ.ஆர் றியாத், ஜே.நிஜாமுதீன், எப்.எம் ஹஸ்மி, எஸ்.எல் றியாஸ், யூ.எல் நியாஸ்கான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.








# கௌரவிப்பு

சாய்ந்தமருது முபாறக் இமேஜ் உரிமையாளர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம் முபாறக், அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் முகமாக ஏற்பாடு செய்த இப்தாரும் கௌரவிப்பு நிகழ்வும் சாய்ந்தமருது சீ பிறிஜ் ஹோட்டலில் திங்கட்கிழமை (17) மாலை இடம்பெற்றது. இப்தார், இராப்போசனத்தைத் தொடர்ந்து, 50 ஊடகவியலாளர்களுக்கு நோன்புப் பெருநாள் பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

வி.ரி சகாதேவராஜா

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# கால்நடைகள் அற்றுப் போகும் வாய்ப்பு

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் எச்சரிக்கை

**சுப்பிரமணியம் பாஸ்கரன்**

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகளை அமைத்து தருவதற்கு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் அரச உயர் அதிகாரிகள் எடுக்கவில்லை என்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன மக்களின் பிரதான தொழில்களாகக் காணப்படுகின்ற போதும், கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் கால்நடைகளை பராமரிப்பதிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த மாவட்ட கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், பல்வேறு தேவைகளுக்காக காணிகளை ஒதுக்குகின்ற போதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்துத் தருவதற்கு மத்திய அரசாங்கமோ மாகாண சபையோ இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கரைச்சி, கண்டாளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கால்நடைகள், பயிர்ச்செய்கை காலங்களில் மேச்சல் தரவைகள் இன்மையால் கஷ்டங்களை எதிர்கொள்ளும் நிலையில் காணப்படுகின்றன.

போசாக்கு குறைபாடு காரணமாக, கால்நடைகள் நோய் எதிர்ப்பு சக்தி இன்றி மிக வேகமாக நோய்வாய்ப்பட்டு இறக்கின்ற நிலைமையும் காணப்படுகிறது. அண்மையிலே ஏற்பட்ட குளிர் காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன. இதற்கான இழப்பீடுகள் கூட இதுவரை முழுமையாக கிடைக்கப் பெறவில்லை.

இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமாக இருந்தால் கால்நடை வளம் அற்றுப் போகின்ற ஒரு மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் எதிர்காலத்தில் அமையக்கூடும் என்றும் மேற்படி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# வங்காலை பறவைகள் சரணாலயத்தில் சிரமதானம்

**எஸ். றொசேரியன் லெம்பேட்**

மன்னார் மாவட்டத்தின் அடையாளமாகவும் இயற்கை வனப்பு மிகுந்த பிரதேசமாகவும் காட்சியளிக்கும் வங்காலை பறவைகள் சரணாலய பகுதியைத் தூய்மையாக்கும் நடவடிக்கை செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்றது.

கறிராஸ் வாழ்வுதயத்தின் பதில் இயக்குநர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தலைமையில், மன்னார் கறிராஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினர் மிசறியோ நிதியுதவியுடன் குறித்த சரணாலயத்தை சுத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் வழிகாட்டலில், மன்னார் வன ஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து வாழ்வுதயப் பணியாளர்கள், இலக்கு கிராம இளைஞர்கள் பங்களிப்பில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், 'இது பறவைகள் சரணாலயம்' எனும் விளம்பரப் பலகையும், 'குப்பை போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது' எனும் பதாகைகளும் பிரதான வீதிக்கு அருகாமையில் நாட்டப்பட்டுள்ளன.

"இந்தச் சரணாலயத்தில் வீட்டுக் கழிவுகளை கொட்டுவதும், பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடிப் போத்தல்கள் என்பவற்றை வீசுவதும் கவலைக்குரிய விடயமாகும். இக்கழிவுப் பொருட்கள் இங்கு வாழும் உயிரினங்களின் உயிர் வாழ்தலுக்கும், இருத்தலுக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. இச்சரணாலயத்தை பாதுகாக்க வேண்டியதும், பறவைகள், விலங்குகள் எனப் பல்லுயிர்கள் வாழ்வதற்கு உகந்த இடமாக மாற்றுவதும் எம் ஒவ்வொருவருடைய கடமையும் பொறுப்பும் ஆகும்" என, சிரமதானத்தை ஆரம்பித்து வைத்த கறிராஸ் வாழ்வுதய பதில் இயக்குநர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தெரிவித்தார்.



### போதைப்பொருள் பாவனை, தற்கொலை, இள வயது கர்ப்பம்:

# பிரச்சினைகளிலிருந்து விடுபட வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

**சுப்பிரமணியம் பாஸ்கரன்**

போதைப்பொருள் பாவனை, தற்கொலை, இள வயது கர்ப்பம் போன்ற முக்கியமான பிரச்சினைகளில் இருந்து கிளிநொச்சி மாவட்டம் விடுபடுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் என். சரவணபவன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமை ஆற்றிய டொக்டர் என். சரவணபவன், மேற்படிப்புக்காக செல்வதையிட்டு, அவருக்கான சேவை நலன் பாராட்டு விழா திங்கட்கிழமை (17) நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரையில் மருத்துவத்துறைக்கு சமூகத்தினுடைய ஒத்துழைப்புகள் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான சமூக மட்ட கட்டமைப்புகளினுடைய ஒத்துழைப்புகள், சுகாதாரத்துறை மேம்படுத்துவதற்கு கடந்த காலங்களில் வசதியாக இருந்தது; அது தொடர்ந்தும் இருக்க வேண்டும்.

கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான கட்டட தேவையுள்ளது. அதைவிட விடுதி வசதிகள் தேவைப்பாடுகளும் காணப்படுகின்றன. இதேபோன்று கிராமப்புற வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2019ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியாற்றி வரும் டொக்டர் என். சரவணபவன் ஆற்றிய சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்த சேவை நலன் பாராட்டு விழாவில் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.



### பண்ணை சுற்றுவட்டத்தில்

# நாகபூசணியம்மனுக்கு மலர் மாலை அணிவித்து வழிபாடு

**நிதர்சன் வினோத்**



யாழ்ப்பாணம், பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து, திங்கட்கிழமை (17) மாலை நல்லை ஆதீனத்தில், இந்து சமயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்த சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி இருந்தனர். குறித்த கலந்துரையாடலின் பின்னர், பண்ணை சுற்றுவட்டத்தில் வைக்கப்பட்ட நாகபூசணியம்மன் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வழிபட்டனர்.

# வவுனியாவில் அதிக ஏக்கரில் சிறுபோகம்

**க. அகரன்**

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் 22,948.68 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை இடம்பெற்று வருகின்றது.

2022ஆம் வருடம் 12 ஆயிரத்து 238 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில், குளங்களில் உள்ள நீரின் அளவு மற்றும் புதிதாக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு காணிகளை விவசாயிகள் தயார்படுத்தியமை போன்ற காரணங்களால் வவுனியா மாவட்டத்தில் அதிகளவிலான ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை சிறுபோக நெற்செய்கைக்கான பசளை வழங்கும் நடவடிக்கையை அப்பகுதி கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# அழைக்கிறது காங்கிரஸ்



அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மூன்றாவது சிரார்த்த தினத்தையொட்டி மே 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை கொழும்பு சௌமியபவனில் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் அமரர் ஆறுமுகன் தொண்டமான் பயன்படுத்திய பொருட்கள் அவரது நினைவுகளின் நிழல்களாக விளங்கும் புகைப்படங்கள், விருதுகள், வரலாற்று பதிவுகளாக திகழும் கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் பலவும் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

எனவே, உங்களிடம் அமரர் ஆறுமுகன் தொண்டமான் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள், கடிதங்கள், குறிப்புக்கள் ஏதேனும் இருப்பின் அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களுக்கு 071-9455222 என்ற வட்ஸ்அப் இலக்கத்தினூடாகவும் நேரடி அவசர தேவைகளுக்கு 071-6876548 / 070-4329131 இலக்கங்களுக்கு அழைக்கவும்.

# மாதவிடாய் காலத்தில் விடுமுறை வேண்டும்

## பொன்னையா தெய்வானை கோரிக்கை

■ எம்.பிரபா

பெண்களின் வாழ்வுக்கான சம்பளம், சேமஇலாப விடயங்கள் மற்றும் தொழில் ரீதியாக கிடைக்க வேண்டிய கௌரவம் என்பவற்றை முறையாக நடைமுறைப்படுத்த கொள்கைகளையும் திட்டங்களையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென விடிவெள்ளி மகளிர் அமைப்பின் தலைவி பொன்னையா தெய்வானை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹட்டன் பகுதியை சேர்ந்த 25 பெருந்தோட்டங்களின் பெண்களை அங்கத்தவர்களாக கொண்டு இயங்கி வரும் இந்த விடிவெள்ளி பெண்கள் அமைப்பு ஹட்டனில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு கருத்துரைத்த அவர், கீழ்கண்ட கோரிக்கைகளையும் முன்வைத்தார்.

மலையக பெண்கள், கர்ப்பிணி தாய்மார் மற்றும் பிள்கைளின் போசக்கு தற்போது பெரும் சவாலுக்கு உட்பட்டுள்ளது. எனவே அதனை நிவர்த்திக்க அரசாங்கம் முறையான வேலைத்திட்டங்கள் செயற்படுத்த வேண்டும்.

தோட்டப்புறங்களில் இயங்கும் கோயில் அரங்காவலர் சபை மற்றும் நலன்புரி அமைப்புகளில் பெண்களின் பங்களிப்பு மிக மிக குறைவாக குறைவாகவே காணப்படுகின்றது எனவே இவற்றில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் முன்மொழிய வேண்டும்.

வீட்டு வேலைத் தொழிலில் ஈடுப்படும் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக உலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் 189வது சரத்தினை இலங்கையில் அமுல்படுத்த அரசாங்கம் உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கருப்பையா தெய்வானை கோரிக்கை விடுத்துள்ளார்.

மாதாந்த சுகயீனத்தின் (மாதவிடாய் காலம்) போது பெண்களுக்கு இரண்டு நாட்கள் சம்பளத்துடனான விடுமுறைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழில் சுமையை அல்லது தொழில் நேரத்தை அதிகரிப்பதால் பெண்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனவே பெண் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கைளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கையை முன்வைத்தார்.



மேலும் சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8ஆம் திகதி பெண்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து செயற்படுத்த வேண்டும் என்பதுடன் பெருந்தோட்டதுறையில் பணிபுரியும் பெண்களை வனவிலங்கு தாக்குதல் மற்றும் இயற்கை அனர்த்தம் என்பவற்றில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து அவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடன் மேற்கொள்ள வேண்டும்.






## ஹைலன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

# நடைபவனியும் ஒன்றுகூடலும்

■ எஸ்.கணேசன்

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடைபவனி மற்றும் ஒன்றுகூடல் ஹட்டன் டன்பார் மைதானத்தில் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

அத்துடன், பழைய மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி பகலிரவு, ஆட்டமாக நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பங்கேற்றார்.

இதன்போது அமைச்சருக்கு, பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் நினைவு சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

2 ஆவது நாள் நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவரும், நீதிபதியுமான ஜெயராமன் ட்ரொஸ்கி அதிதியாக பங்கேற்றார். அத்தோடு, ஹட்டன் கல்வி வலய பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் உட்பட பலர் இதன்போது கலந்துக் கொண்டிருந்தனர்.

இரு நாட்கள் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளில் சுமார் 3000 பேர் வரை பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தப்பிய ஒன்பது கைதிகளும் சிக்கினர்




■ எஸ்.கணேசன்

சிறைச்சாலைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான பதுளை மாவட்டத்தின் தல்தெனை இளைஞர் சீர்திருத்த நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற ஒன்பது கைதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என தல்தென சீர்திருத்த நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நோன்பு நடவடிக்கைகளுக்காக தனி அறையில் தங்க வைக்கப்பட்டிருந்த போது அந்த அறையில் இருந்த இரும்பு கம்பியை அறுத்துக்கொண்டு அங்கிருந்து திங்கட்கிழமை (17) தப்பி சென்றிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதிகள் வழங்கிய தகவலின்படி, சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, தல்தென சிறைச்சாலையின் புதிய பண்ணைக்கு அருகில் செவ்வாய்க்கிழமை (18) காலை இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தகெட்டிய பொலிஸார் கிராம மக்களின் உதவியுடன் மேற்கொண்ட தேடுதலின் போது கந்தகெட்டிய பதுலுஓயாவிற்கு அருகில் உள்ள வயல்வெளிக்கு அருகில் மேலும் நான்கு இளைஞர்கள் திங்கட்கிழமை (17) மாலை 6.30 மணியளவில் கைது செய்யப்பட்டதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (18) அதிகாலை 4 மணியளவில் கந்தகெட்டிய கிரிவெஹெர பதுலுஓயாவிற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது எஞ்சிய மூன்று இளைஞர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக சிறைச்சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

23, 24, 25, 26 வயதுடைய இந்த இளைஞர்கள் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறைத்தண்டனை பெற்றவர்கள் என்றும் சீர்திருத்தத்தின் பின்னர் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் விடுவிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த சீர்திருத்த நிலையத்தில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் 376 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த இளைஞர் சீர்திருத்த நிலையத்தில் 48 உத்தியோகத்தர்கள் மட்டுமே இங்கு கடமையாற்றுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# வீதி விபத்தில் மூதாட்டி பலி

■ எஸ்.கணேசன்

கண்டி - நுவரெலியா பிரதான வீதியில் வாகனம் மோதியதில் மூதாட்டி ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இவ்விபத்து புஸ்ஸலாவை, இரட்டைப்பாதை பகுதியில் செவ்வாய்க்கிழமை (18) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

நுவரெலியாவிலிருந்து கண்டியை நோக்கி பயணித்த வாகனமொன்று இவரை மோதிவிட்டு, தப்பிச்சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதிக இரத்தபோக்கு ஏற்பட்டதால் குறித்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



கம்பளை பொலிஸ் கைரேகை பிரிவுடன் இணைந்து புஸ்ஸலாவை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாமிமலையில் புத்தாண்டு விழா...





■ காமினி பண்டார இலங்கதிலக்க

சாமிமலை விவசாய சங்க உறுப்பினர்கள் மற்றும் ஸ்டெஸ்பி தோட்ட எதண்டெல் பிரிவைச் சேர்ந்த யங் பர்க் விளையாட்டு கழக உறுப்பினர்கள் இணைந்து, புத்தாண்டு விளையாட்டு விழாவை, எதண்டெல் விளையாட்டு மைதானத்தில் திங்கட்கிழமை (17) நடத்தினர். அத்துடன், பங்கேற்றவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பகல் போசனமும் வழங்கப்பட்டது.

## அரச நிவாரண திட்டங்களுக்குள்

# தொழிலாளர்களையும் உள்ளீர்க்கவும்

## மாவட்ட செயலாளர்களுக்கு இராஜாங்க அமைச்சர் கடிதம்

அரச நிவாரண திட்டங்களுக்குள் பெருந்தோட்ட தொழிலாளர்களை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். என மாவட்ட செயலாளர்களை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

குறைந்த வருமானம் ஈட்டுவோரின் பட்டியலுக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளீர்த்து அவர்களுக்கும் அரச வாழ்வாதார நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

பெருந்தோட்டங்கள் அடங்கிய பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்ட செயலாளர்களை, எழுத்துமூலம் அரவிந்தகுமார் வலியுறுத்தியுள்ளார்.

மாவட்ட செயலாளர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்



மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிவாரணம், சமுர்த்தி நிவாரணம், நோயாளர்களுக்கான நிவாரணம், குறை வருமானம் பெறுவோருக்கான நிவாரணம் மற்றும் ஏனையோருக்கான நிவாரணம் என பல்வேறு தரப்பினருக்கு அரச நிவாரணங்கள் வழங்கப்பட்டு வரும் அதேவேளை இந்நாட்டில் மிகக்குறைந்தளவிலான வருமானத்தை ஈட்டி வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான அரச நிவாரணங்களும் வழங்கப்படுவதில்லை என்பதை தங்களது கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

எமது மக்கள் மீது பகிரங்கமாகவே பாரபட்சம் காட்டப்படுவது அப்பட்டமான மனித உரிமை மீறல் செயற்பாடாகும். மேற்படி நிவாரணங்களை பெற்றுக் கொள்ள தகுதி வாய்ந்தவர்கள் கிராம புறங்களில் மாத்திரமே என்ற நிலைப்பாடு தவறானது. இந்த நிவாரணங்களை பெற்றுக்கொள்ள அதிக தகுதிகளை கொண்டவர்கள்.

பெருந்தோட்ட பகுதிகளில் வாழ்வோரே. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழும்பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு அரச நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோருக்கு முறையான அறிவித்தல்களை வழங்குமாறு தயவாக கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இரத்தினபுரியில் காசநோய் அபாயம்

இரத்தினபுரி மாவட்டத்தில் காசநோய் அதிகமாக பரவும் அபாயம் காணப்படுவதாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இலங்கையில் 331 காசநோயாளிகள் கண்டறியப்பட்டனர், இதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்

இலங்கையில் வருடாந்தம் சுமார் 14,000 காசநோயாளிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டாலும், பத்தாயிரம் பேர் மட்டுமே கண்டறியப்படுகின்றனர்.

# ஒரே சூழில் நான்கு சிசுக்கள்



■ ஷேன் செனவிரத்ன

பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாயொருவர் ஒரே சூழில் நான்கு சிசுக்களை பெற்றெடுத்துள்ளார்.

குருணாகல், தோரயாய பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 30 வயதான தாயே ஆண் சிசுக்கள் மூன்றையும் பெண் சிசுவையும் பெற்றெடுத்துள்ளார்.

சிசுக்களின் தாய், பாடசாலை ஆசிரியை என்பதுடன், வல்லவபிட்டிய பிரதேச செயலாளர் காரியாலயத்தின் அபிவிருத்தி அதிகாரியாக தந்தை பணியாற்றுகின்றார்.

நான்கு சிசுக்களும் வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளின் தாய் நலமுடன் இருப்பதாகவும், சுமார் 10 நிமிட இடைவெளியில் சிசேரியன் மூலம் குழந்தைகள் வெளியே எடுக்கப்பட்டதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் சம்பத் ஞானரத்ன தெரிவித்தார்.

# கூரையின் மேலே முளைத்திருக்கும் மரம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் பிரதான பஸ் நிலையத்தின் தனியார் பஸ் நிறுத்துமிடத்துக்கு மேலே இருக்கும் கட்டடத்தின் கூரையில் மரமொன்று முளைத்துள்ளது. அதன் வேர்கள், கூரைக்கு கீழே தொங்குகின்றன.

இதனால், அனர்த்தங்கள் பல ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகுமென பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கூரையின் பீலிகளில் வேர்கள் ஊடறுத்துச் சென்றுள்ளன. ஒருசில வேளைகளில் அந்த பீலியுடன் மரம் விழுந்தாலும் விழக்கூடும் என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கூரைக்கு மேல் மரம் முளைத்திருப்பது தொடர்பில் ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் கவனத்துக்கு பல முறை கொண்டுவந்த போதிலும், எவ்விதமான நடவடிக்கைகளையும் அதிகாரிகள் எடுக்கவில்லை என்றும், தகவல் கொடுத்த சிலர் தெரிவித்துள்ளனர்.



# சிறுவர் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் செயலை கைவிடவும்

நகரங்களுக்கு வெளியே பொதுவாக நோக்குவோமாயின், கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மறுநாளில் இருந்தே பலரும் வேலையொன்றை தேடியலைந்து கொண்டிருப்பர். பெறுபேறுகள் வரும் வரையில் வேலைக்குச் செல்வது உசிதமானதென விளக்கம் கொடுப்பர். அவ்வாறு முடிவு எடுப்பவர்களில் பலர், பெறுபேறுகள் வந்ததன் பின்னர் மீளவும் கற்பதில் ஆர்வமெடுக்காமல் தொழிலை தொடர்ந்துவிடுவர்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தவர்கள் கல்வியைத் தொடர்வர். சாதாரண தரத்தில் போதியளவான சித்தியை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், இரண்டாவது முறையை பற்றிச் சிந்திப்பதில்லை. வேலையிலேயே குறியாக இருப்பர். சில வேளைகளில் அவர்கள் மீது தவறிருக்காது. ஏனெனில், அந்தளவுக்கு வீட்டின் பொருளாதார பற்றாக்குறை தலைவிரித்தாடிக்கொண்டு இருக்கும்.

இன்னும் சிலர், பாடசாலை கல்வியை இடைநடுவில் விட்டு, நகரங்களில் ஹோட்டல்களுக்கும், வீட்டு வேலைகளுக்கும் செல்வர். இதில், தரகர்களின் வகிபாகம், மூளையை சலவைச் செய்வதாகும். பெற்றோரை தங்களுடைய வலைக்குள் வீழ்த்தும் தரகர்கள், அவ்வீடுகளில் இருக்கும் பெண் பிள்ளைகளை பங்களாக்களுக்கு பணிப்பெண்களாக அழைத்துவந்துவிடுவர்.

ஆண் பிள்ளைகளை ஹோட்டல்களுக்கு அழைத்துவந்து பீங்கான், கோப்பைகளை கழுவதற்கு விட்டுவிடுவர். ஒருசிலர் தப்பிப் பிழைத்துக்கொள்வர். இன்னும் சிலர் சதாகாலமும் அந்தத் தொழிலையே கட்டிப்பிடித்துக்கொள்வர். இவ்வாறான தொழில்களில் பொதுவாக பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளே ஈடுபட்டிருப்பர்.

அவ்வாறு வேலைக்கு அமர்த்தப்படும் பிள்ளைகளின் எதிர்காலமே சூன்யமாகும் வகையில் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், பணிப்பெண்களாக வேலைக்கு அமர்த்தல், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் இன்னுமே தொடர்ந்துகொண்டுதான் இருகின்றது. சிறிய சம்பளத்தில் கூடுதல் வேலைகளை வாங்கிக்கொள்ளும் முதலாளிகள், சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தவே அக்கறைக்காட்டுவர்.

குடும்பம் எதிர்நோக்கும் பொருளாதார கஷ்டம் காரணமாக 14 முதல் 15 வயதான மூன்று மாணவர்கள் வேலைக்கு செல்வதாக கூறி, வீடுகளை விட்டு சென்றுள்ள சம்பவம் வென்னப்புவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. அவர்களை தேடிவரும் பொலிஸார். கண்டால் தகவல் தருமாறு, பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

கிடைக்கும் வருமானத்தில் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து வாழப்பழகிக்கொள்வதே இந்தக் காலத்துக்கு நல்லதாகும். அவை குறித்து பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகளைத் தனியாக விட்டுவிட்டு தூரப்பிரதேசங்களுக்கும் வெளிநாட்டுக்கும் வேலைக்குச் செல்வதும் அதிகரித்துள்ளது. இதனால், சிறுவர்களின் பாதுகாப்பு, எதிர்காலம் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது.

தங்களுடைய பிள்ளைகளுக்கு முறையாக பாதுகாப்பை ஏற்படுத்திக்கொடுத்தன் பின்னர், வேலைவாய்ப்பைத் தேடி வெளிநாட்டுக்குச் செல்வதில் தவறில்லை. அதேபோல, தங்களிடத்தில் வேலை தேடிவருவோர் சிறுவர்கள் என்றால், சிறுவர் தொழிலாளர்களை ஊக்குவிக்காமல் இருக்க முதலாளிகள் பழகிக்கொள்வது நல்லது.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# எந்த உண்மையை கண்டறியப் போகிறார்கள்?



எம்.எஸ்.எம் ஐயூப்

தென்ஆபிரிக்காவில் அமைக்கப்பட்டதைப் போன்ற உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை அமைக்கும் நோக்கில், தென்ஆபிரிக்க அனுபவங்களை அறிந்து கொள்வதற்காக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியும் கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை தென்ஆபிரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது அவர்கள் அந்நாட்டின் ஜனாதிபதி சிறில் ரமபோஸா மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் சந்தித்தனர். உண்மையை கண்டறியும் பொறிமுறையொன்றை நிறுவுதல் பற்றி, இவ்வருடம் ஜனவரி மாதம் அமைச்சரவை எடுத்த முடிவொன்றின் பிரகாரமே, இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக இதுகுறித்து அரசாங்கம் தெரிவித்திருந்தது.

'உண்மையயைக் கண்டறியும் பொறிமுறை' என்று பொதுவாக இதை அழைத்தாலும் இது இனப்பிரச்சினை தொடர்பானது. அதேவேளை, இதில் வெளிநாட்டமைச்சர் சம்பந்தப்படுவதன் மூலம், இது இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களை கருத்தில் கொள்வதைப்பார்க்கிலும் வெளிநாட்டு அரங்குகளை நோக்கமாகக் கொண்ட காரியம் என்பதும் தெளிவாகிறது.

இந்த விஜயம் தொடர்பான செய்தி வெளியான போதும், அமைச்சர்கள் நாடு திரும்பிய பின்னர் ஊடகங்களில் அதைப் பற்றி பெரிதாக எதுவும் வெளியிடவில்லை. அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று அரசாங்கம் அறிவிக்கவும் இல்லை. போரால் பாதிக்கப்பட்டவர்களாவது அதைப் பற்றி எந்தவோர் அக்கறையை செலுத்தவும் இல்லை. ஆணைக்குழுக்கள் பற்றி, இலங்கை மக்களுக்கு இருக்கும் கசப்பான அனுபவமே அதற்குக் காரணமாகும்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்த போது, சர்வதேச மனித உரிமை அமைப்பு அதைப் பற்றி ஓர் ஊடக அறிக்கையை வெளியிட்டது. 'பொறுப்புக் கூறலைப் பற்றிய பிரச்சினையை சர்வதேச சமூகம் எழுப்பும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இலங்கை அரசாங்கம் ஓர் ஆணைக்குழுவை நியமிக்கும். அக்குழு நீண்ட காலத்தை இழுத்தடித்துவிட்டு, எவ்வித பயனையும் காணாமல் முடிவடைந்துவிடும்' என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

உண்மைதான்! 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களை அடுத்து 1984ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக வட்ட மேசை மாநாட்டை கூட்டினார். அதில் ஒரு பயனும் கிடைக்கவில்லை.

1985ஆம் ஆண்டு திம்பு பேச்சுவார்த்தைகளை அடுத்து ஜே.ஆர்., 1986ஆம் ஆண்டு அரசியல் கட்சி மாநாட்டைக் கூட்டினார். அதில் ஓரளவுக்கு அதிகார பரவலாக்கல் ஆராயப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை புலிகள் நிராகரித்து மீண்டும் போரை ஆரம்பித்த போது, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ 1989ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாட்டை ஆரம்பித்தார். அத்தோடு அவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவென மங்கள முனசிங்க தெரிவுக்குழுவை நியமித்தார். அவர் காணாமற்போனவர்களைப் பற்றிய ஆணைக்குழுவையும் நியமித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் 1995ஆம் ஆண்டு பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்தார். அது நூற்றுக்கு மேற்பட்ட அமர்வுகளை நடத்திய பின்னர் கைவிடப்பட்டது. காணாமற்போனவர்களைப் பற்றி அறிய, பிராந்திய ரீதியில் மூன்று ஆணைக்குழுக்களை சந்திரிகா நியமித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கென 2006ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி, அதன்மூலம் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவை நியமித்தார். அது பலமுறை கூடி, 2010ஆம் ஆண்டு, அதன் அறிக்கையை மஹிந்தவிடம் கையளித்தது. அறிக்கை காணாமல் போய்விட்டது.

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கென, 2006ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பகவதியின் தலைமையில் வெளிநாட்டு நிபுணர் குழுவை மஹிந்த நியமித்தார். அக்குழு, அரசாங்கத்திடம் இருந்து போதிய உதவி கிடைக்கவில்லை என்று இடைநடுவில் கலைந்துவிட்டது. அதையடுத்து வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற முக்கிய சில மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பற்றி ஆராய, உதலாகம ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. மஹிந்தவின் காலத்திலேயே காணாமற்போனவர்களைப் பற்றிய பரணகம ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து, போரில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதற்காகவென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம், புதியதோர் ஆணைக்குழுவை நியமிப்பதாக 2020 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் கூறியது. ஒரு வருடம் கடந்து அடுத்த மனித உரிமைகள் பேரவை கூட்டம் நெருங்கிய போது, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸின் தலைமையில் அந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

அக்குழு கடந்த பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி, தனது இறுதி அறிக்கை நகலிலுள்ள பரிந்துரைகளின் ஒரு சாராம்சத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தது. அதிலும் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையின் அவசியம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில்தான், அவ்வாறானதொரு பொறிமுறையை அமைக்கவென அமைச்சர்கள் தென்ஆபிரிக்காவுக்குச் சென்றிருந்தனர்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையைப் பற்றிய கருத்து ஆராயப்படுவது முதல் முறையல்ல! இது அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவடைந்தது முதல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையும் ஏனைய சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் வலியுறுத்தி வரும் ஒரு விடயமாகும்.

கடந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தின் காலத்தில் இதுவும் காணாமற்போனோருக்கான அலுவலகம் உள்ளிட்ட வேறு சில காரணங்களும் முக்கிய விடயங்களாக மேலெழுந்து வந்தன. ஆயினும் போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடந்த நிலையில், அவ்வாறானதொரு பொறிமுறையை உருவாக்க இப்போது தான் படிக்கப் போகிறார்கள்.

இவ்வருடம் நடைபெற்ற 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த நவம்பர் மாதம் கூறினார். அதற்காகவென பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தார். பின்னர், இரண்டு வருடங்களில் பிரச்சினையை தீர்ப்பதாக கூறினார். இந்தப் பின்னணியில், இந்த உண்மையைக் கண்டறியும் பொறிமுறை பற்றிய விடயமும், களத்தில் குதித்துள்ளமை முக்கியமாகும்.

இங்கு எழும் பிரதான பிரச்சினை என்னவென்றால், எதைப்பற்றி அரசாங்கம் உண்மையயை கண்டறியப் போகிறது என்பதாகும். இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில், நாம் எங்கே பிழை விட்டோம் என்பதைப் பற்றி அரசாங்கம் ஆராயப் போகிறதா அல்லது, போரின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களைப் பற்றி ஆராயப் போகிறதா?

மனித உரிமைகள் விடயத்தைத்தான் ஆராயப் போகிறது என்றால், எந்தக் கால கட்டத்திலான சம்பவங்கள் ஆராயப்படப் போகின்றன? மக்கள் விடுதலை முன்னணிக்கும் அரச படைகளுக்கும் இடையிலான மோதலின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களும் ஆராயப்படப் போவதாக ஒரு சிங்கள பத்திரிகை கடந்த வாரம் செய்தி வெளியிட்டு இருந்தது.

அவ்வாறாயின், 1971 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை அரசாங்கம் ஆராயப்போகிறதா? இது வேகமாக வளர்ந்து வரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களைக் குறி வைத்து ஆரம்பிக்கப் போகும் திட்டமா என்ற கேள்வியும் அதன்படி எழுகிறது.

வடக்கு, கிழக்கு போரை மட்டுமே கருத்தில் கொண்டாலும், போர் முடிவடைந்து 14 வருடங்கள் உருண்டோடிவிட்டன. கருத்தில் கொள்ளப்படப்போகும் சம்பவங்களோடு சம்பந்தப்பட்ட சாட்சியாளர்களில் எத்தனை பேர் உயிரோடு இருக்கிறார்கள் என்பது பெரும் கேள்வியாகும். அத்தோடு போரால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானோர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அவர்களில் எத்தனை பேர் சாட்சியமளிக்க முன்வருவார்கள் என்பது அடுத்த கேள்வியாகும்.

அதேவேளை நீதி, நியாயம் பற்றிய விடயத்தில் இலங்கை மக்கள் இன ரீதியாக வெகுவாக பிரிந்து சிந்திக்கும் நிலையில் உள்ளனர். சிலர் செஞ்சோலை தாக்குதலை நியாயப்படுத்தும் அதேவேளை, சிலர் புறக்கோட்டை குண்டு வெடிப்பை நியாயப்படுத்துகின்றனர். இந்த நிலையில், உண்மையைக் கண்டறிவதானது மிகவும் கடினமான விடயமாகும்.

அத்தோடு மனித உரிமைகள் விடயத்தில் எவ்வகையான நியாயத்தை வழங்க வேண்டும் என்பதிலும் மக்கள இன ரீதியாக பிரிந்து சிந்திக்கின்றனர். சிலர் குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலமே நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்க, வேறு சிலர் குற்றங்களை பரஸ்பரம் ஏற்று ஐக்கியத்தை உருவாக்க வேண்டும் என்கின்றனர்.

2018ஆம் ஆண்டு அதாவது, 'நல்லாட்சி' அரசாங்கத்தின் காலத்தில் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில் விசாரணைகள் மூலம் உண்மையை கண்டறிந்தாலும் அவற்றைப் பாவித்து எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பொதுவானதோர் உடன்பாட்டை ஏற்படுத்த எடுக்கும் முயற்சியே மேலும் கருத்து மோதல்களை உருவாக்கும் என்றே தெரிகிறது.

எனினும் கடந்த காலத்தில் அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகளை கவனிக்கும் போது, உண்மையைக் கண்டறியும் பொறிமுறையைப் பற்றியும் பெரிதாக எதிர்ப்பார்ப்புகளை வைத்திருப்பதில் பயனில்லை என்றே கூற வேண்டும். அதுதான் இதுவரை கண்டறிந்த உண்மையாகும்.



## வாழ்வியல் தரிசனம்

அர்த்தமற்ற மனக்காட்சிகள் அலைய வைக்கின்றன. இதைக் களையத் தெரியாமல் அதனுடன் ஒன்றிப்போரும் உண்டு.

'நான் யாவரையும் என்றும் உயிர்ப்புடன் அரவணைப்பவன்; இறைவனை நம்புகின்றவன்' என்பதை உறுதியுடன் உணர்ந்தால், மனதில் உள்ள தேவையற்ற தூசிகள் எரிக்கப்பட்டுவிடும்.

எடுத்தற்கெல்லாம், சலனப்படுவது வெட்கப்பட வேண்டியதாகும். துணிவு இன்றி வாழ்வது கடினமாகும். உண்மையுடன் வாழ்ந்தால் ஏது பயம்?

தவறுகளை அணைத்தால், பிரச்சினைகள் தேடிவரும்.

என்றும் சுதந்திரமாக எவரிடமும் அச்சப்படாமல், யாவரையும் நேசிப்பவராக இருந்தால், எந்தக் கவலைகளும் வரப்போவதில்லை.

நல்ல பிரஜைகளாக யாவரும் வாழ்ந்தால், வையகம் சொர்க்கமாகும். இதை உணராமலே மனிதன் வீம்புடன் நடக்கின்றான்.

வையகம் புனிதமானது. பிரஜைகள் தான் வாழும் உரிமை தெரியாமல், புரியாமல் செருக்குடன் சீவிக்கின்றனர். அடுத்த தலைமுறைகளைப் பற்றி உணர்வதே இல்லை. தன்னைத்தான் தாக்கலாகாது.

தன்னைத் தான் சுத்தப்படுத்தாமல், நெஞ்சத்தைக் காயப்படுத்தினால், தேவையற்ற கற்பனைகள் தான் சுற்றி நிற்கும்

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாடசாலை மாணவர்களை புறக்கணிக்கும் அரச பஸ்கள்



ஆனையிறவு, நாவல் கொட்டியான், தட்டுவன் கொட்டி, உமையாள்புரம் ஆகிய பகுதிகளில் இருந்து காலை வேளையில் பாடசாலைகளுக்கு செல்லும் சுமார் 84 வரையான மாணவர்களை, பஸ்கள் ஏற்றிச் செல்லாமையால், பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதில் தினமும் சிரமங்களை எதிர்கொள்வதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பரந்தன் இந்து மகாவித்தியாலயம், உமையாள்புரம் பாடசாலை, கிளிநொச்சி புனித திரேசா கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளுக்கு குறித்த மாணவர்கள், தினமும் சென்று கல்வி கற்று வருகின்றனர்.

இந்தநிலையில், குறித்த மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று வருவதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களில் பயணம் மேற்கொள்வதற்கு பருவகால சீட்டுகளை பெற்றுக் கொண்டிருந்தாலும், குறித்த மாணவர்களை பஸ்கள் ஏற்றிச் செல்வதில்லை.

இவ்வாறான நிலையில், குறித்த மாணவர்களை பஸ்கள் ஏற்றிச் செல்வதில்லை என்பது தொடர்பாக, பலதடவைகள் முறைப்பாடுகளைச் செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த விடயத்தில் உரிய தரப்பினர் கவனம் எடுத்து செயற்பட வேண்டுமெனவும் மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்

# சீரழிக்கப்படும் அமலபுரத்தின் ஆரோக்கியம்



வா. கிருஸ்ணா



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு, அமலபுரம் பகுதியில் உள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தால், அப்பகுதியில் வாழும் மக்கள், பல்வேறு வகைப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

குறிப்பாக, இவர்களது வீடுகளுக்கு அருகில் காணப்படும் குப்பை மேடு காரணமாக, குடிநீர் அசுத்தமடைந்துள்ளதுடன் இலையான் தொல்லைகளுடன், தோல் வியாதிகளும் ஏற்படுவதாகவும் அமலபுரம் மக்கள் தெரிவிக்கின்றார்கள். இந்நிலைமை குறித்து, தமது அதிருப்தியைத் தெரிவித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணுமாறு கோரி, நேற்று முன்தினம் (17) அவர்கள் எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, அமலபுரம் பகுதியில் 2010ஆம் ஆண்டு, குறித்த மக்கள் குடியமர்த்தப்பட்டு இருந்தார்கள். இந்நிலையில், 2014ஆம் ஆண்டு திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அங்கு அமைக்கப்பட்டு, கழிவுகள் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, இந்த மக்களிடம் "இங்கு சேகரிக்கப்படும் கழிவுகள் மீள்சுழற்சி செய்யப்பட்டு, கூட்டுப்பசளை தயாரிக்கப்படும். இந்தத் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தால், பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்படாது. அத்துடன், இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்" என அதிகாரிகளால் உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஏறத்தாழ பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் வாக்குறுதி அளித்தபடி எதுவும் நடைபெறவில்லை. குறித்த பகுதி, கழிவுகள் கொட்டப்படும் இடமாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது; எந்தவித மீள்சுழற்சி பசளை உற்பத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அத்துடன், தமக்கான தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் யாருக்கும் எந்தவித தொழிலும் வழங்கப்படவில்லை என்றும் அமலபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கழிவுகள் கொட்டப்படும் பகுதியில், மக்களுக்கு தெரியாமல் மாமிச கழிவுகளைக் கொட்டும் கைங்கரியங்களும் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக, மக்களின் சுகாதாரத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் பாரிய தீங்குகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாமிசக் கழிவுகளை நாய்கள், காகம் போன்றவை எடுத்துவந்து, வீட்டுக் கூரைகளிலும், கிணறுகளிலும், வீட்டு முற்றங்களிலும் வீதிகளிலும் போட்டுவிடுகின்றன. அத்துடன், கழிவு மேட்டுக்கு அருகில், மாமிச கழிவுகளை புதைப்பதன் காரணமாக, நிலத்தடி நீர் அசுத்தமடைந்து உள்ளதுடன், குறித்த நீரைப் பயன்படுத்த முடியாதவாறும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கு குடிநீரை பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இத்தகைய நிலைமைகளால் அமலபுரத்தின் ஆரோக்கியமே சீர்கெட்டுப் போயுள்ளதாகவும் அமலபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.



மேலும், மழைக் காலங்களில் குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் இருந்து வழிந்தோடி வரும் வெள்ளம், மக்கள் குடியிருக்கும் வீடுகளை நோக்கிவருவதன் காரணமாக, சுகாதாரம், ஆரோக்கியம் தொடர்பிலான பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.



இதன் காரணமாக, இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அடிக்கடி தோல் நோயால் பாதிக்கப்படுவதுடன் ஈக்களின் தொல்லைகளாலும் அல்லலுறுவதுடன் தொற்று நோய்களாலும் அடிக்கடி பாதிக்கப்பட்டு, ஆரோக்கியமற்ற வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றார்கள்.



அமலபுரம் மக்களின் நிலைமை இவ்வாறு அவலங்களுடன் தொடர்வது குறித்து, மண்முனைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஜோ. சர்வேஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு அமைவாக, குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில், மாமிச கழிவுகள் கொட்டுவது நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த பகுதியில் சுகாதார பிரச்சினைகள் ஏற்படாத வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" எனவும் தெரிவித்தார்.







# திஸ்ஸமஹாராமயில் 'தஞ்சை நகரம்'

## கதிர்காம யாத்திரைக்கு தகுதி பார்க்கும் 'குளவி பிள்ளையார்' கோவில் பாழடைந்த நிலையில்...



விபுலமாமணி வி.ரி சகாதேவராஜா




கதிர்காமத்தில் இருந்து ஹம்பாந்தோட்டை செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள நகரம் திஸ்ஸமஹாராம. இந்த நகரத்துக்கு அருகில் புராதன சைவத் தமிழ்க் கிராமமான 'தஞ்சை நகரம்' அமைந்துள்ளது. மன்னர்கள் காலத்தில் இருந்தே தொன்றுதொட்டு அழைக்கப்பட்டு வரும் 'தஞ்சை நகரம்' கிராமத்தில், பாழடைந்த நிலையில் கோவில் ஒன்று காணப்படுகின்றது. கூரைகள் விழும் நிலையிலும் மூலவிக்கிரகம் அகற்றப்பட்டு, வெறும் பீடம் மட்டுமே காணப்படும் நிலையில் தற்போது இந்தக் கோவில் காணப்படுகின்றது.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன், இந்தக் கோவிலின் நிலைமையை நேரிலறிந்து, திருகோணமலை ஆசிரியர் பிரகாஷ் மூலமாக, சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியிடம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சித்தர்கள் குரல் அமைப்பினர், சிவசங்கர் ஜி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (16) தஞ்சை நகருக்கு நேரடியாக விஜயம் செய்தனர்.


இதன்போது கோவிலைப் பார்வையிட்டதுடன், கோவிலின் உரிமையாளர் விஸ்வநாதன், பராமரிப்பாளர் சிவகுமார் ஆகியோருடன் கலந்துரையாடியதன் பின்னர், சித்தர்கள் கோவிலில் மடைவைத்து, இரண்டு மணிநேர சிறப்பு யாகத்தை நடத்தினர். அதன்போது சூழவுள்ள தமிழ், சிங்கள மக்களும் இணைந்து கொண்டனர்.

குறித்த யாகத்தில், சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உபதலைவர் மனோகரன், நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, தியாகராஜா, சிங்கப்பூர் டொக்டர் பி. மகேஸ்வரன், வீரமுனை கஸ்தூரன், கிஷோர் ஆகியோர் பங்கேற்றனர். கோவிலை புனரமைத்து உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமென சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி அங்கு தெரிவித்தார்.


















கோவிலின் தலைவர் விஸ்வநாதன் தஞ்சை நகரின் சிறப்புகள் மற்றும் வரலாறு குறித்துக் பின்வருமாறு கூறினார். மன்னராட்சிக் காலத்தில் பெருநகராக, 'தஞ்சை நகரம்' விளங்கியது. தஞ்சை நகரத்தில், பிரதான வீதியை அண்மித்து, பிரதான வீதியை நோக்கியவாறு அமைந்திருப்பதுதான், கதிர்காம யாத்திரிகர்களுக்கும் தன்னை நாடுவோருக்கும் அருள் வழங்கும் 'குளவிப் பிள்ளையார்' கோவில்.

கதிர்காம யாத்திரிகர்கள் இந்தக் கோவிலைக் கடந்து செல்லும்போது, இப்பிள்ளையாரின் அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும் என்ற மரபு காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

யாத்திரைக்குத் தகுதி அற்றவர்களை, பிள்ளையார் குளவி வடிவில் தண்டிப்பார் என்றும் அதனாலேயே 'குளவிப் பிள்ளையார்' என்ற பெயரும் புராதன காலத்திலிருந்து வழங்கப்பெற்று வருகிறது.

ஆரம்பத்தில் சித்தர்களாலும் ஞானிகளாலும் பூசிக்கப் பெற்ற புனிதம் மிக்க இக்கோவில் அமைந்த நிலம், ஆங்கிலேய இராச்சியத்தின் ஓச்சிய ராணிக்கு உரியதாகியது. இந்த நிலையில், இக்கோவிலின் அருளைப் பெற்று உயர்ந்த மகான் மதனகுரு சாமி என்பவர், 1903 இல் ராணியிடமிருந்து கோவிலையும் நிலத்தையும் பெற்றார்.

இந்தியாவில் இருந்து ஐந்தரை அடி உயரமான அழகிய பிள்ளையார் சிலையைக் கொணர்வித்து, 1929இல் அதைத் ஸ்தாபித்து, அழகிய கட்டடக்கலையுடன் கூடிய கோவிலைக் கட்டினார். மதனகுரு சாமியின் மறைவுக்குப் பின்னர், அவரது மனைவியும் முருக பக்தையுமான பழநி அம்மா இந்தக் கோவிலை பேணிவந்தார்.

1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தால் இக்கோவில் பாதிப்புக்குள்ளாகி அழிவடையும் நிலைக்குச் சென்றது. 'கிராமோதயம் 87' கொண்டாட்டங்களை முன்னெடுத்த ஆர். பிரேமதாஸாவின் பணிப்புரையின் பேரில் 23.06.1987 அன்று இந்தக் கோவில் மீளவும் திருத்தி அமைக்கப்பெற்றது. இதன் முக்கியத்துவத்தை அப்போது நிறுவப்பெற்ற கல்வெட்டு சிறப்புறக் காட்டுகிறது.

நாட்டில் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 2007இல் இந்தக் கோவில் மீளவும் பாதிப்புக்கு உள்ளானது. இங்கிருந்த ஐந்தரை அடி உயரமான மூலமூர்த்தி காணாமல் போய்விட்டது.

தடயமற்று அழியும் தறுவாயில் உள்ள இந்தக் கோவிலில், கடையில் வாங்கிய ஒரு சிறிய பிள்ளையாரை வைத்து இப்போது வழிபடுகின்றனர். மதனகுருவின் பெறாமகனாகிய கந்தையா விஸ்வநாதன் ஆகிய நானும் மனைவியும் இந்தக் கோவிலை தற்போது பராமரித்து வருகின்றோம்.

இந்தக் கோவிலைச் சூழவும் சுமார் 50 சைவத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. சிங்கள மக்களும் இக்கோவிலுக்கு வந்து செல்கின்றனர். சூழ உள்ள சைவத் தமிழ்க் குடும்பங்கள் வறிய நிலையில் உள்ளன. ஆனால், இங்குள்ள எல்லோருக்கும் கோவிலைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்பு உள்ளது.

இந்தக் கோவில் திருத்தி மீளமைக்கப்பெற்றால், இங்கு வாழும் சைவத் தமிழர்களுக்கும் பாத யாத்திரிகருக்கும் சிங்கள பக்தர்களுக்கும் பெரும் துணையாக இருக்கும். இந்தச் சுற்றுச்சூழலில், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் தஞ்சை நகரம் என்றிருந்த இந்தப் பிரதேசம், இன்று 'சுதுகம்பல' என அழைக்கப்படுகின்றது. தூர்ந்து கிடக்கும் இக்கோவிலைப் புனரமைத்து தருமாறு வேண்டுகிறேன்" என்றார்.

கோவிலைப் புனரமைத்து மக்களின் வழிபாட்டுக்காகத் திறந்து விடும் நாளை இந்துக்கள் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

பீகார்

# தடுக்க வந்த பெண் அதிகாரிக்கு நேர்ந்த கொடூரம்



பீகார் மாநிலத்தில், பெண் அதிகாரியொருவர் மணல் கடத்தல்காரர்களால் தாக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களில் மணல் கடத்தல், கள்ளச்சாராயம் தயாரித்தல் போன்ற சட்ட விரோத செயல்கள் அண்மைக்காலமாக அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம் இதுபோன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்களைத் தடுக்க செல்லும் அதிகாரிகள், தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்களும் சில நேரங்களில் நடப்பதுண்டு.

இந்நிலையில் பீகாரில் பிஹ்தா நகரில் அண்மையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட கும்பலைத் தடுக்க சுரங்கத் துறையைச் சேர்ந்த பெண் அதிகாரியொருவர் சென்றுள்ளார்.

அவருடன் இரு ஆய்வாளர்களும் சென்று இருந்தனர். இந்நிலையில் குறித்த பெண் அதிகாரி வருவதைப் பார்த்த சட்ட விரோத கும்பலொன்று அவரை மானபங்கம் செய்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதனை அங்கிருந்த நபர் ஒருவர் தனது தொலைபேசியில் படம் பிடித்துள்ளார்.

இத் தாக்குதல் காட்சிகள் தற்போது சமூக வலைத்தளத்தில் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து, குறித்த பெண் அதிகாரியைக் கொடூரமாக தாக்கிய வழக்கில் 44 பேரைப் பொலிஸார் கைது விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குழந்தையை எதிர்பார்க்கிறேன் – இலியானா






இயக்குனர் சங்கரின் 'நண்பன்' திரைப்படத்தில் நடிகர் விஜய்க்கு ஜோடியாக நடித்தவர் இலியானா டிகுரூஸ்.

இப்படத்தில் " இருக்கானா " பாடலுக்கு இவர் ஆடிய நடனமானது மிகப்பெரும் பிரபலமடைந்திருந்து. அதுமட்டுமல்லாது இவர் தெலுங்கு மற்றும் இந்தி திரைப்படங்கள் பலவற்றிலும் நடித்துள்ளார்.

இந்நிலையில், அவர் நேற்றைய தினம் இன்ஸ்டாகிராமில் "தனது முதல் குழந்தையை எதிர்பார்த்திருப்பதாக அறிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து அவர் வெளியிட்ட புகைப்படத்தில், குழந்தைகளின் உடைகளை வெளியிட்டு, அதில், சாதனை பயணம் தொடங்கி விட்டது " எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தனது காதலர் யாரென்ற விவரங்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை.

அவரது இந்த பதிவை பார்த்ததும் ரசிகர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். எனினும் வேறு சிலர், உங்களுக்கு திருமணம் ஆகியுள்ளதா? என்றும் குழந்தைக்கு தந்தை யாரென்றும் கேட்டுள்ளனர்.

## ரோபோ சங்கரா இது?

**அதிர்ச்சியில் ரசிகர்கள்**




சின்னத்திரையில் நகைச்சுவை நடிகராக அறிமுகமான ரோபோ சங்கர் தற்போது வெள்ளித் திரையிலும் முன்னனி நகைச்சுவை நடிகராக வலம் வருகின்றார்.

குறிப்பாக புலி, விஸ்வாசம், மாரி, வேலைக்காரன் என முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்ததன் மூலம் தனக்கென ஓர் ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கியுள்ளார்.

ரோபோ சங்கரின் மகள் இந்திரஜாவும் பிகில், விருமன்ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி ரோபோ சங்கருடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தை இந்திரஜா வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். அதை பார்த்த ரசிகர்கள் ரோபோ சங்கர் உடல் மெலிந்து ஆளே மாறிப்போய் இருப்பதாக அதிர்ச்சி வெளியிட்டனர்.

## மகனின் கண்முன்னே மரணித்த தந்தை



மகனுக்கு நீச்சல் கற்றுக்கொடுத்துக்கொண்டு இருக்கும் போதே ஒருவர் மயங்கி விழுந்து மரணித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்தியூர் அருகே உள்ள பிரம்மதேசம் குழியூர் பகுதியைச் சேர்ந்தவர் சேகர். 36 வயதான இவர் தனது 12 வயது மகனுக்கு நேற்று முன்தினம் கிணற்றில் நீச்சல் கற்றுக்கொடுத்துள்ளார்.


சுமார் 60 அடி ஆழமுடைய குறித்த கிணற்றில் சுமார் 40 அடி ஆழத்துக்கு நீர் இருந்துள்ளது. இந்நிலையில் இளைப்பாறுவதற்காக சேகர் கிணற்றின் பக்கவாட்டில் உள்ள படிக்கட்டில் ஏறி நின்றுள்ளார்.

அப்போது திடீரென அவர் மயங்கி கிணற்றுக்குள் விழுந்துள்ளார். இதை பார்த்த அவரது மகன் அதிர்ச்சி அடைந்து "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என அபயக்குரல் எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் அப்பகுதியில் இருந்த மக்கள் அவரைக் காப்பாற்றுவதற்கு முன்பாகவே மகன் கண் முன்னே சேகர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கென்யா

## கடவுளைக் காண்பதற்காக விரதமிருந்த 4 பேர் உயிரிழப்பு



கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில், கடவுளைக் காண்பதற்காக நடுக்காட்டில் உண்ணா விரதமிருந்த 4 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகென்சி என்தெங்கே என்ற மதபோதகர் "வேறொரு உலகில் உள்ள கடவுளை காண்பதற்கு உணவு, மற்றும் நீர் அருந்தாமல் காத்திருந்தால் கண்டிப்பாக கடவுளை அடையலாம் "எனப் பிரச்சாரம் செய்து வந்துள்ளார்.

இதனை உண்மையென நம்பி கிளிஃபி காட்டிற்குள் சென்றிருந்தவர்களில் நால்வர் உயிரிழந்துள்ள நிலையில் 15 பேரை மீட்ட பொலிஸார் தலைமறைவான போதகரைத் தேடி வருகின்றனர்.

அக்காட்டில் மேலும் பலரின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## பூமிக்கு வந்த விண்வெளித் தக்காளி

விண்வெளியில், மனிதர்களுக்கான உணவுப்பொருட்களை நிலவில் இருந்து கொண்டு வரப்படும் மண்ணைக் கொண்டு விளைவிக்க முடியுமா என்ற முயற்சியை நாசா கடந்த வருடமே முன்னெடுத்திருந்தது.

எதிர் காலத்தில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கோ, நிலவிற்கோ அல்லது செவ்வாய் கிரகத்திற்கோ ஆய்விற்காக செல்லும் விண்வெளி வீரர்களுக்கு புதிய காய்கறிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இம்முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நிலவில் இருந்து மண் கொண்டுவரப்பட்டு பதப்படுத்தப்பட்டு அந்த மண்ணில் தக்காளி விதை விதைக்கப்பட்டது. பூமியில் இருந்து கொண்டு செல்லப்பட்ட தக்காளி விதையும் விண்வெளியின் சீதொஷ்ண நிலைக்கு ஏற்ப பதப்படுத்தப்பட்டிருந்தது.



முதலாவது டெஸ்டில்

## இனிங்ஸால் அயர்லாந்தை வீழ்த்திய இலங்கை

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இனிங்ஸ் மற்றும் 280 ஓட்டங்களால் இலங்கை வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 6 விக்கெட்டுகளை இழந்து 591 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து, பிரபாத் ஜெயசூரிய (7), விஷ்வ பெர்ணாண்டோ (2), ரமேஷ் மென்டிஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய மூன்றாம் நாள் ஆரம்பத்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், லொர்கன் டக்கர் 45, ஜேம்ஸ் மக்கொலம் 35, ஹரி டெக்டர் 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் பொலொ ஒன் முறையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட அயர்லாந்து, ரமேஷ் மென்டிஸ் (4), பிரபாத் ஜெயசூரிய (3), விஷ்வ பெர்ணாண்டோவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்களையே பெற்றுத் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஹரி டெக்டர் 42, ஜோர்ஜ் டொக்ரல் 32, கேர்ட்டிஸ் கம்பர் 30, மார்க் அடைர் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக பிரபாத் ஜெயசூரிய தெரிவானார்.

## ஐ.பி.எல்: பெங்களூரை வென்ற சென்னை



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பெங்களூருவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடனான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூர்

சென்னை: 226/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 83 (45), ஷிவம் டுபே 52 (27), அஜின்கியா ரஹானே 37 (20), மொயின் அலி ஆ.இ 19 (09), அம்பாதி ராயுடு 14 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 1/30 [4])

பெங்களூர்: 218/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் மக்ஸ்வெல் 76 (36), பப் டு பிளெஸி 62 (33), தினேஷ் கார்த்திக் 28 (14), சுயஷ் பிரபுதேஸாய் 19 (11) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: டெவோன் கொன்வே

இந்நிலையில், ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்கிறது.

## பரிஸ் ஸா ஜெர்மைன் முகாமையாளராக மொரின்யோ?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளராக, இத்தாலிய சீரி ஏ கழகமான றோமாவின் முகாமையாளர் ஜொஸே மொரின்யோ பதவியேற்பார் எனத் தெரிகிறது.

இந்நிலையில், றோமாவின் முகாமையாளராக இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்னாள் முகாமையாளர் அந்தோனியோ கொன்டே பதவியேற்பார் எனக் கூறப்படுகிறது.




மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

## பாகிஸ்தானைத் தோற்கடித்த நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் பாகிஸ்தான் வென்றிருந்த நிலையில், லாஹூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் பதிலணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. லேதம் 64 (49), டரைல் மிற்செல் 33 (26), மார்க் சப்மன் ஆட்டமிழக்காமல் 16 (09), ஜேம்ஸ் நீஷன் 10 (06) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஹரிஸ் றாஃப் 4-0-31-2, ஷகீன் ஷா அஃப்ரிடி 4-0-33-2, ஷடாப் கான் 4-0-34-1, பாஹீம் அஷ்ரப் 2-0-12-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 164 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களையே பெற்று நான்கு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், இஃப்திஹார் அஹ்மட் 60 (24), பாஹீம் அஷ்ரஃப் 27 (14) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜேம்ஸ் நீஷம் 4-0-28-3, அடம் மில்ன் 4-0-37-2, றஷின் றவீந்திரா 3-0-28-2, மற் ஹென்றி 4-0-27-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.


இப்போட்டியின் நாயகனாக லேதம் தெரிவானார்.

## பயேர்ண் மியூனிச் முன்னாள் முகாமையாளருடன் செல்சி பேச்சு

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சி, தமது புதிய முகாமையாளரொருவரைத் தேடும் பகுதியொன்றாக ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்னாள் முகாமையாளர் ஜூலியன் நகெல்ஸ்மன்னுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

மியூனிச்சால் கடந்த மாதம் 35 வயதான நகெல்ஸ்மன் பதவி நீக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தமது முன்னுரிமையான தேர்வு யார் என்பதை செல்சி தீர்மானிக்கவில்லை என நம்பப்படுகிறது. ஸ்பெய்னின் பயிற்சியாளரான லூயிஸ் என்றிக்கேயும் செல்சி முகாமையாளராக விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 19 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.